31.மே.2022 பக்கங்கள்- 02

பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

0776906182

தினப்புயல்
PTN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்

புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.
T.P- 0770457661

மலர்-02 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 66

# கச்சத்தீவு விவகாரம் – ஸ்டாலினுக்கு இலங்கையில் எதிர்ப்பு



இந்திய பிரதமர் நரேந்திர மோதி, தமிழகத்திற்கு மே 26 ஆம் திகதி பயணம் மேற்கொண்டிருந்த தருணத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விடுத்த கோரிக்கை இலங்கையில் எதிர்ப்பை உண்டாக்கியுள்ளது. தமிழ்நாட்டின் கடலோர மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில், கச்சத்தீவை மீட்டெடுக்க வேண்டும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், பிரதமர் நரேந்திர மோதியிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

கச்சத்தீவை இந்தியாவுக்கு இலங்கை விடுவிப்பது தொடர்பான தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் கருத்து சாத்தியமற்றது என, இலங்கை கடல் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்கனவே கூறியிருந்தார். தமிழ்நாட்டு மீனவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணமும் மாநிலத்தின் முதலமைச்சருக்கு இருக்கத்தானே செய்யும் என்று கேட்கிறார் தமிழ்நாடு மீன்வளத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன். இலங்கை பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, நிவாரண உதவிகளை செய்வதை போல காண்பித்து, தமது உரிமையை பறித்தெடுக்க தமிழ்நாடு முதலமைச்சர் முயற்சிப்பதாக இலங்கை மீனவர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

02 ஆம் பக்கம் பார்க்க...

# விவசாயிகளிடம் ஜனாதிபதி விடுத்துள்ள வேண்டுகோள்

உரத் தேவையைப் பூர்த்தி செய்வதில் பல நாடுகளுடனான கலந்துரையாடல் வெற்றியடைந்துள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். எனவே உரத் தட்டுப்பாடு அல்லது வேறு எக்காரணம் கொண்டும் யால பருவ பயிர்ச்செய்கையை கைவிடவேண்டாம் என அனைத்து விவசாயிகளுக்கும் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார். யால பருவத்தில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய உணவுப் பற்றாக்குறையைத் தணித்தல் தொடர்பான கலந்துரையாடல் ஜனாதிபதி மாளிகையில் நேற்று (30) இடம்பெற்றபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

உணவுப் பாதுகாப்பு தொடர்பான விரிவான அரச - தனியார் கூட்டு வேலைத்திட்டத்தை உடனடியாக ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். இறக்குமதி, விநியோகம், முறையான முகாமைத்துவம், விவசாயிகள் மற்றும் அதிகாரிகள் மத்தியில் விழிப்புணர்வு மற்றும் ஒருங்கிணைப்பு என்பனவற்றிற்காக தேசிய உரக் கொள்கையொன்று துரிதமாக வகுக்கப்படவேண்டுமெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

விவசாயிகளின் விருப்பத்திற்கு ஏற்ப இரசாயன அல்லது கரிம உரங்களைப் பயன்படுத்தி பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு விவசாய அமைச்சின் பூரண ஈடுபாடு வழங்கப்படவேண்டுமெனவும் ஜனாதிபதி தெரிவித்தார். தேசிய கால்நடை அபிவிருத்திச் சபைக்கு சொந்தமான கந்தகாடு பண்ணைகளை சோளம், சோயா மற்றும் ஏனைய பயிர்களை பயிரிடுவதற்காக விரைவாக விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

அதிகளவான விவசாயம் செய்யப்படாத காணிகள் அரசாங்கத்திற்குச் சொந்தமாக உள்ளதால், அந்தக் காணிகளை இனங்கண்டு இளம் பயிர்ச் செய்கையாளர்களிடம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# புகையிரதத்தில் ஒதுக்கப்பட்ட ஆசனங்களுக்கான கட்டணம் அதிகரிப்பு

புகையிரதத்தில் ஒதுக்கப்பட்ட ஆசனங்களுக்கான கட்டணத்தை அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அதனடிப்படையில் 30 சதவீதத்தினால் இவ்வாறு கட்டண அதிகரிப்பு அமுல்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பேருந்து கட்டண அதிகரிப்பிற்கு அமைய இவ்வாறு கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஜூன் மாதம் 1 ஆம் திகதி முதல் இவ்வாறு கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.




# சிறுமி வன்புணர்வு செய்யப்படவில்லை – பிரேத பரிசோதனை

பண்டாரகம, அட்டலுகம பிரதேசத்தில் கொலை செய்யப்பட்ட சிறுமி வன்புணர்வு செய்யப்படவில்லை என பிரேத பரிசோதனையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ இதனைத் தெரிவித்துள்ளார்.

சடலத்தின் பிரேதப் பரிசோதனை மூன்று தடயவியல் அதிகாரிகளின் தலைமையில் இடம்பெற்றுள்ளது. மூக்கு மற்றும் வாயின் ஊடாக தண்ணீர் மற்றும் சேறு சென்றதன் காரணமாக மரணம் ஏற்பட்டிருக்கலாம் என்றும் பிரேத பரிசோதனையில் தெரியவந்துள்ளது. இக்கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் நேற்று இரவு கைது செய்துள்ளனர்.

# மேலும் 40,000 மெட்ரிக் தொன் டீசல் இலங்கைக்கு

மேலும் 40,000 மெட்ரிக் தொன் டீசலுடனான கப்பல் இலங்கையை வந்தடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்திய உதவித்திட்டத்தின் கீழ் இந்த கப்பல் நேற்று மாலை கொழும்பை வந்தடைந்துள்ளது.



# கச்சத்தீவு விவகாரம்...

தமிழ் நாட்டிலிருந்து அரிசி, பால்மா, மருந்து வகைகள் உள்ளிட்ட பொருட்களை நிவாரண உதவியாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த 18 ஆம் திகதி சென்னையிலிருந்து அனுப்பி வைத்திருந்தார். இவ்வாறு அனுப்பிவைக்கப்பட்ட பொருட்கள் கடந்த 22 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தன. எனினும், தமிழ்நாடு முதலமைச்சரினால் அனுப்பி வைக்கப்பட்ட பொருட்கள் மக்களுக்கு பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாத நிலையில், அவரது இந்த கருத்து இலங்கையர், மீனவர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

மு.க.ஸ்டாலின், இலங்கை - இந்திய மக்களின் தொப்புள் கொடி உறவை அறுக்கும் செயற்பாடாகவே தாம் இதனை பார்ப்பதாக யாழ், மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளன தலைவர் அண்ணலிங்கம் அன்னராசா தெரிவித்தார். இந்த அறிவிப்புக்கு பின்னர் யாழ் மாவட்டத்தின் பல சங்கங்கள் கண்டனம் தெரிவித்ததோடு, தமிழ்நாட்டு உறவுகள் என்ற போர்வையில் உணவு பொருட்களை அனுப்பி, மீனவருடைய வயிற்றில் தொப்புள் கொடியாக இருக்கின்ற ஒரு செயற்பாட்டிற்கு திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முடிவெடுத்திருக்கின்றார். இவ்வளவு காலமும் மீனவருடைய பிரச்சினையால், தொப்புள் கொடி அறாமல், உறவு வேண்டும், தொப்புள் கொடி உறவு வேண்டும் என்று காத்திருந்த மீனவருக்கு, ஒரு தொப்புள் கொடியை முதலமைச்சரே அறுப்பதற்கு முயற்சிக்கும் ஒரு செயற்பாடாகவே நாங்கள் இதை பார்க்கின்றோம்," என அவர் கூறுகின்றார்.

தமிழகத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட நிவாரண உதவித்திட்டம் வேண்டாம் என்ற அறிவிப்பை வெளியிடுமாறு மக்கள் வலியுறுத்த ஆரம்பித்துள்ளதாகவும் யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளன தலைவர் அண்ணலிங்கம் அன்னராசா குறிப்பிடுகின்றார். தமிழ்நாடு முதலமைச்சர் வடக்கு மக்களுக்கு உதவி கரம் நீட்டுவதாக முதலில் செய்தி வந்தது. ஆனால், இலங்கை பூராகவும் அதை கொடுக்க சொல்லி எமது தமிழ் தலைமைகள் கேட்டது. அந்த இலங்கை பூராகவும் கொடுக்க வெளிக்கிட்டதன் நோக்கம், கச்சத்தீவை எடுப்பதாகும். உணவு பொருளை தந்து விட்டு, இதை கேட்பது முதுகில் குத்தும் ஒரு செயற்பாடு. தமிழ் நாட்டிலிருந்து அனுப்பப்பட்ட உணவு பொதிகள் வேண்டாம் என அறிவிக்குமாறு பெரும்பாலானோர் இப்போது சொல்லி வருகின்றார்கள். ஆனால், ஒரு சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நாங்கள் உணர்ச்சிவசப்படக்கூடாது என எண்ணி பொறுமையாக இருக்கின்றோம்." என அவர் குறிப்பிடுகின்றார்.

கச்சத்தீவை இந்தியா மீளப் பெறுமாக இருந்தால், அது வடப் பகுதி மக்களுக்கு செய்யும் துரோகமாகவே தாம் கருதுவதாக மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்க சம்மேளனத்தின் செயலாளர் மொஹமட் ஆலம் தெரிவிக்கின்றார். தமிழகத்தையும், தமிழக மக்களையும் இன்றும் நாம் நன்றியுடன் நினைவு கூர்ந்துகொண்டிருக்கின்றோம். அவர்கள் செய்த உதவியை. ஆனால், செய்த உதவிக்கு கை மாறு பெறுவதற்கான அவர் இந்த வார்த்தையை பயன்படுத்தினாரா, அல்லது கச்சைத்தீவை தாம்தான் பெற்றுக்கொடுத்தேன் என்ற வரலாறு சொல்வதற்காக பேசினாரா தெரியவில்லை. ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை அடிக்க முயற்சிக்கின்றாரோ தெரியவில்லை. கச்சத்தீவை இந்தியா பெறுமாக இருந்தால், வடப் பகுதி மக்களுக்கு செய்யும் பெரும் துரோகம், எதிர்கால சந்ததிக்கு செய்கின்ற பெரிய அநீதி. இந்த சாபக்கேடு இரண்டு தலைவர்களையும் சார்ந்து நிற்கும்." என மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்க சம்மேளனத்தின் செயலாளர் மொஹமட் ஆலம் தெரிவிக்கின்றார்.

தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் கோரிக்கை பிரிவினையை ஏற்படுத்தும் செயல் என்று வர்ணகுலசூரிய ஜூட் நாமல் பெர்னாண்டோ தெரிவிக்கின்றார். மீன் வங்கியை அழிக்கும் நாடாகவே, இந்தியாவை நாங்கள் கருதுகிறோம். பலவந்தமாக மீன் வளங்களை இந்தியா அழித்து வருகின்றது. இந்த மீன்பிடி பிரச்சினையை தமிழ்நாட்டில் அரசியலாகப் பயன்படுத்தி வருகின்றார்கள். எமது எல்லையாக நாம் கச்சத்தீவையே பயன்படுத்தி வருகின்றோம். இலங்கை மற்றும் இந்திய மீனவர்களின் ஒற்றுமையை ஏற்படுத்தும் ஒரே கிறிஸ்தவ தேவாலயம் கச்சத்தீவிலேயே அமைந்துள்ளது. இரண்டு நாட்டு மக்களும் அந்த இடத்திற்கு சென்று வழிபாடுகளில் ஈடுபடுகின்றனர். இந்த ஒற்றுமையை இல்லாது செய்து, இந்திய மற்றும் இலங்கை மீனவர்களுக்கு இடையில் பிரிவினையை ஏற்படுத்தி செய்யும் இந்த நடவடிக்கைகளுக்கு நாம் எமது எதிர்ப்பை வெளியிடுகின்றோம். இலங்கைக்குள் இதற்கு முன்னராக ஒரு காலத்தில் பலவந்தமாக பருப்பு உள்ளிட்ட உணவு வகைகளை போட்டார்கள். பலவந்தமாக மாகாண சபை முறைமையை நாட்டிற்குள் கொண்டு வந்து, வெள்ளை யானையை இந்தியா செயற்படுத்தியிருந்தது. இந்தியா பிரிவினையையே அப்போதிலிருந்து செய்து வருகின்றது." என அவர் கூறுகின்றார்.

கச்சத்தீவு விவகாரம்: தமிழ்நாடு மீன்வளத்துறை அமைச்சர் சொல்வது என்ன? இலங்கை மீனவ அமைப்புகளின் குமுறல் தொடர்பாக தமிழ்நாடு மீன்வளத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், கச்சத்தீவை மீட்டுத் தர வேண்டும் என்பது தமிழ்நாட்டு மீனவர்களின் நீண்டநாள் கோரிக்கையாக உள்ளது. வளைகுடா பகுதிகளில் சிறிது தூரத்தில் மீன் பிடிக்கச் சென்றாலே இலங்கை கடற்படை தமிழ்நாடு மீனவர்களை கைது செய்கிறது. புதுக்கோட்டை, நாகப்பபட்டினம் ஆகிய பகுதிகளில் மீன் பிடிக்கச் சென்றாலும் இதே நிலைமைதான். தி.மு.க ஆட்சியில் இருந்த காலகட்டத்தில் கச்சத்தீவு கொடுக்கப்பட்டதற்கு அப்போதே எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. அப்போது முதல்வராக இருந்த கலைஞர், இதனைக் கடுமையாக எதிர்த்தார்.

தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார சூழலைக் கருத்தில் கொண்டு, அந்நாட்டுக்கு அனைத்து உதவிகளையும் செய்ய வேண்டும் என்பதில் தமிழ்நாடு முதலமைச்சர் உறுதியாக இருக்கிறார். அதேநேரம், தமிழ்நாட்டு மீனவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணமும் மாநிலத்தின் முதலமைச்சருக்கு இருக்கத்தானே செய்யும்? தற்போதைய சூழலில் எதாவது ஒரு வகையில் இலங்கைக்குள் நுழைவதற்கு சீனா விரும்புகிறது. அதேபோல், அனைத்து நாடுகளும் நினைக்கின்றன. அப்படியிருக்கும்போது கொடுத்த இடத்தைக் கேட்டு வாங்கும் நோக்கிலேயே முதலமைச்சர் இப்படியொரு கோரிக்கையை வைத்தார் என்கிறார்.

தொடர்ந்து பேசுகையில், பிரதமர் பங்கேற்ற விழாவில் பேசிய முதல்வர், இது சரியான தருணம், இலங்கைக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுத்து அந்நாட்டையும் மீட்க வேண்டும், நமது மீனவர்களையும் பாதுகாக்க வேண்டும் என்றார். இலங்கையில் துறைமுகத்தை சரிசெய்ய உதவி செய்வதாகக் கூறி 100 வருட காலத்துக்கு அந்தத் துறைமுகத்தையே சீனா வைத்துக் கொண்டது. ஆனால், கச்சத்தீவை மீட்பது என்பது தமிழ்நாட்டின் உரிமை. அதனை பிரதமரின் கவனத்துக்கு முதல்வர் கொண்டு சென்றுள்ளார். இந்தியாவில் இருப்பது இந்திய மீனவர்கள்தான், தமிழ்நாட்டு மீனவர்கள் அல்ல. இந்தியாவில் உள்ள அனைவரையும் காப்பாற்ற வேண்டியது பிரதமரின் கடமை. அந்தவகையில் கச்சத்தீவை பெற்றுத் தர வேண்டும் என்பதுதான் எங்களின் கோரிக்கையாக உள்ளது. காரணம், மாநில அரசால் கச்சத்தீவை மீட்க முடியாது என்கிறார். மேலும், தமிழ்நாடு இல்லாவிட்டால் யாழ்ப்பாணம் இருக்குமா? இந்தியாவை வைத்துத்தான் யாழ்ப்பாணம் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அங்கு எதாவது பிரச்சினை ஏற்பட்டால் இந்தியா தலையிடும் என்பதால்தான் யாழ்ப்பாண மக்கள் பாதுகாப்பாக உள்ளனர் என்கிறார் அனிதா ராதாகிருஷ்ணன். (பிபிசி தமிழ்)

# பொருளாதார நெருக்கடியில் இருந்து அம்பாறை மாவட்ட மக்களை மீட்கின்ற விசேட மனித நேய வேலை திட்டம்

*(நூருல் ஹுதா உமர்)*

*பொருளாதார நெருக்கடியில் இருந்து அம்பாறை மாவட்ட மக்களை மீட்டெடுக்கின்ற விசேட மனித நேய வேலை திட்டம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுதொண்டு அமைப்புகளின் பங்களிப்புடன் இராணுவத்தின் அம்பாறைமாவட்ட கட்டளைதலைமையகத்தால்முன்னெடுக்கப்படுகின்றது. சிங்கப்பூர், இலங்கை ஆகிய நாடுகளை சேர்ந்த தொண்டு நிறுவனங்களின் 63.75 மில்லியன் ரூபாய் மனித நேய நிதியில் 42,500 குடும்பங்களை இலக்கு வைத்து எல்லைகளை கடந்த அன்பு என்கின்ற மகுடத்திலான வெசாக் பண்டிகை கால மனித நேய வேலை திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.*

*இதன் ஆரம்ப விழாவும், காரைதீவு பிரதேச மக்களுக்கான உலர் உணவு பொதிகள் கையளிப்பு வைபவமும் காரைதீவு பிரதேசத்துக்கான இராணுவ முகாம் பொறுப்பதிகாரி மேஜர் சமில் நிசானின் ஒழுங்கமைப்பில் மாவட்ட கட்டளை தளபதி உள்ளிட்ட இராணுவ உயரதிகாரிகள், சர்வ சமய தலைவர்கள் ஆகியோரின் பங்கேற்புடன் காரைதீவு விபுலானந்தா கலாசார மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றன.*

*இந்து சமயத்தை பிரதிநிதித்துவம் செய்து காரைதீவு சிவசக்தி குடைச்சாமி சர்வமத பீடத்தின் தலைவர் கொடைச்சாமி ஜீவாகர சுவாம்ஜி கலந்து கொண்டு இவ்வைபவத்தை ஆசிர்வதித்தார். இவர் அடங்கலான பேராளர்கள்பயனாளிகளுக்கு உலர் உணவுநிவாரண பொதிகளை வருமானம் குறைந்த மற்றும் வறிய குடும்பங்களை சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 500 பயனாளி குடும்பங்களுக்கு கையளித்தார்கள்.*










# பொருளாதார நெருக்கடியில் அவதியுறும் மக்களுக்கு அரசாங்க மானியங்கள் வழங்கிவைப்பு

(நூருல் ஹுதா உமர்)

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக, மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதால் தற்போது அமுலிலுள்ள நலனோம்பு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் சமுர்த்தி நலனுதவி பெற்றுவரும் குடும்பங்கள் மற்றும் சமுர்த்தி காத்திருப்பு பட்டியலிலுள்ள குடும்பங்களுக்கு உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் மூன்று மாதங்களுக்கு மானியம் வழங்குவதற்கான நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

இத்திட்டத்திற்கமைய, அம்பாறை மாவட்ட இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட இறக்காமம் சமுர்த்தி வங்கியினால் சமுர்த்தி நன்மை பெற்றுவரும் குடும்பங்களுக்கான குறித்த மானியத் தொகை வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை (30) ஆரம்பம் செய்து வைக்கப்பட்டது. இதில் இறக்காமம் சமுர்த்தி வங்கியில் மாதாந்தம் மானியம் பெற்றுவரும் சுமார் 1800 குடும்பங்களும், சமுர்த்தி காத்திருப்புப் பட்டியலிலுள்ள 849 குடும்பங்களும் இதன் மூலம் நன்மையடையவுள்ளன.

சமுர்த்தி வங்கியின் முகாமையாளரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான ரீ.கே.றஹ்மத்துல்லா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம்.றஸ்ஸான் (நளீமி) விஷேட அதிதியாக கலந்து கொண்டதுடன் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமட் நஸீல், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.சி.எம்.தஸ்லீம், முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ்.செல்வகுமார், சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் பிரியந்தி வேரகொட மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.